பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

கடர்: 6 பிரசோற்பத்தி ஸூ சித்திரை மீ 14 உ. சனிக்கிழமை [27 04 1991] UTHAYAN—A Lively National Tamil Daily கதிர்: 144

★ பொருளாதார நெருக்கடி ★ படையினர் முயற்சியில் பின்னடைவு
★ உள்நாட்டு, வெளிநாட்டு அழுத்தங்கள்

# இராணுவத் தீர்வை கைவிடும் இக்கட்டான நிலையில் அரசு!

## தாக்குதல் நடவடிக்கைகளைக் குறைக்க விரைவில் நிர்ப்பந்திக்கப்படக் கூடும்

— உதயன் அரசியற் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஏப். 27

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணும் தனது முயற்சியை தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகக் கைவிட வேண்டிய இக்கட்டான ஒரு சூழ்நிலைக்கு ஸ்ரீலங்கா அரசு தள்ளப்பட்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ நடவடிக்கைகளில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் பின்னடைவு, சர்வதேச மற்றும் உள்நாட்டு அழுத்தங்கள், நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி, பொருளாதார நெருக்கடிகள் முதலிய பல்வேறு காரணங்களினாலேயே அரசுக்கு இந்நிலை ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

கடந்த 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தபோது, ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அங்கு ஆற்றிய உரை இதனையே எடுத்துக் காட்டுவதாக அர

[5 ஆம் பக்கம் பார்க்க]

## காரைநகர்ப் பகுதியில் பொதுமக்கள் பலி?

மூளாய், ஏப். 27

காரைநகரில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளில் சிக்கி பத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மேலும் பலர் சூட்டுக் காயங்களுடன் அங்கு அகப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

காரைநகர் களபூமியைச் சேர்ந்த இரத்தினம் மீனாட்சி [வயது 65] என்ற வயோதிப் பெண்மணி ஒருவர் ஷெல்தாக்குதலுக்கு இலக்காகி பலியானதாகத் தெரியவந்தது.

ஏற்கனவே மிதிவெடிச் சம்பவம் ஒன்றில் காலை இழந்த சோதிலிங்கம் என்பவர் நேற்று முன்தினம் கர்ப்பிணியான தனது மனைவியையும் மற்றும் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு அங்கிருந்து தப்பி வர முயன்றதாகவும்—

வழியில் வேட்டுக்கு இலக்காகி அவரது மனைவி அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும்—

மனைவியின் சடலம் அவ்விடத்திலேயே கிடப்பதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

பாலாவோடையை சேர்ந்த கே. ஆர். தில்லையம்பலம் என்பவரும் சூட்டுக் காயத்துக்கு இலக்காகியிருப்பதாகத் தெரிய வந்தது.

உயிரிழந்த, காயமடைந்த ஏனையோர் விவரங்களை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## படையினரிடம் சிக்கியோர் வெளியேற முடியாத நிலை

மூளாய், ஏப். 27

காரைநகர்ப் பகுதியில் இராணுவம் புதிதாக நிலை கொண்டுள்ள இடங்களில் சிக்கிக் கொண்டிருப்பதாகக் கருதப்படும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் அங்கிருந்து வெளியேற முடியாத நிலையில் உள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமான கையோடு நூற்றுக் கணக்கானோர் தமது உடைமைகளைக் கைவிட்டு மூளாய்ப் பகுதிக்குத் தப்பி வந்துள்ளனர். ஏனையோர் — அநேகமாக வயோதிபர்களும் பெண்களும் — இராணுவத்தினரிடம் சிக்கிக்கொண்டுள்ளனர்.

இவ்வாறு சிக்கியிருப்பவர்கள் இக்கரை முருகமூர்த்தி கோவில், ஈழத்துச் சிதம்பரம் ஆகிய கோயில்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இதேசமயம் —

நேற்று முன்தினம் தமது உடைமைகள் மற்றும் உறவினர்களைக் கைவிட்டு அங்கிருந்து வெளியேறி வந்தவர்கள் நேற்று முழுநாளும் மூளாய்ப் பகுதியில் தமது உறவினர்களின் வரவை எதிர்பார்த்து கூட்டங்கூட்டமாக சோகமே உருவாக நின்றிருந்ததைக் காண முடிந்தது. [உ-5-3-15]

## பொன்னாலைப் பாலம் குண்டு வைத்துத் தகர்ப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 27

குடாநாட்டுடன் காரைநகரை இணைக்கும் பொன்னாலைப் பாலத்தின் ஒரு பகுதி நேற்றுக் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

காரைநகர் வலந்தலைச் சந்தியில் நின்ற இராணுவத்தினர் நேற்றுக் காலை 9-30 மணியளவில் ஒரு கவச வாகனத்தில் வந்து, பொன்னாலைப் பக்கமாகவுள்ள மூன்றாவது பாலத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்த்து விட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-15]

## 6 படையினர் உயிரிழப்பு; 20 பேர் காயமடைந்தனர்

கொழும்பு, ஏப். 27

காரைநகர் கடற்படை முகாம் பகுதியில் நேற்று முன்தினம் [வியாழன்] நடந்த சண்டையில் ஆறு படையினர் கொல்லப்பட்டனர் என்றும்—

மேலும் படையினர் 20 பேர் காயமடைந்தனர் என்றும்— கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## தனிச் சிங்களச் சட்டத்தினாலேயே தமிழர் ஆயுதங்களைத் தூக்கினர்

### ஸ்ரீ. ல. சு. கட்சியைச் சாடுகிறார் பிரேமதாஸா

கொழும்பு ஏப். 27

1956 இல் சுதந்திரக் கட்சி அரசாங்கம் கொண்டு வந்து நிறைவேற்றிய சிங்களம் மட்டும் சட்டம்தான், தமிழர்களை ஆயுதம் தூக்க வைத்தது.

ஜனாதிபதி பிரேமதாஸா பண்டாரவளையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி ஆட்சியில் இருந்தபோது கடைப்பிடிக்கப்பட்ட குறுகிய யதார்த்த விரோத கொள்கைகளே இலங்கைத் தமிழர் பிரச்சினை ஆரம்பமாவதற்குக் காரணம் என்றார் அவர்.

சிங்களம் மட்டும் கொண்டு வரப்பட்ட பின்னரே தமிழர்கள் ஆயுதம் எடுக்க முற்பட்டனர் என்றும் அதன் கடும் விளைவுகளை நாடு இன்று சந்தித்து வருவதாகவும் அவர் மேலும் சொன்னார்.

சுதந்திரக்கட்சி அரசாங்கம் நடத்திய சமயம் கடைப்பிடித்த மொழிக்கொள்கை தமிழ் மக்களை அந்நியப் படுத்திவிட்டது.

சுதந்திரக்கட்சி அரசாங்கம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அச்சந்தி முராளி



தேர்தலிலை ஆளை ஆள் வெல்லுறதுக்கு தமிழரைப் பலிக்கடாவாக்கிறது தானே உவையின்ரை அரசியல், பிற கென்ன புதுசாச் சொல்லு [illegible]

## ஊர்காவற்றுறைப் பகுதியில் வியாழன் கடும் மோதல்

யாழ்ப்பாணம், ஏப். 27

ஊர்காவற்றுறைப் பகுதியிலும் நேற்று முன்தினம் [வியழன்] அதிகாலையில் கடும்மோதல் இடம்பெற்றது.

சின்னமூளாய், பொன்னாச்சி, கடைச்சந்தி, நாரந்தனை ஆகிய இடங்களில் உள்ள காவல் அரண்களிலிருந்து படையினர் வெளியேறி விடுதலைப்புலிகளின் காவல் அரண்களை நோக்கி முன்னேற முயன்றபோதே மோதல் மூண்டது.

படையினருக்கு உதவியாக இரண்டு பொம்மர்கள், இரண்டு ஹெலி, அவ்ரோ விமானம் ஒன்று வான் தாக்குதலை நடத்தின.

இச்சண்டையில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதங்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவுப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு

ஆனையிறவுப் பகுதியில் நேற்று விமானக் குண்டு வீச்சும் ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன.

இயக்கச்சி குறிஞ்சாத்தீவுப் பகுதியில் நேற்று மாலை 5 மணிக்கு அவ்ரோ ஒன்று குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது. பின்னர் முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்களும்மேற்கொள்ளப்பட்டன. [உ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆரம்பசுகாதாரவழிகாட்டி பேராசிரியர் த. இராமதாஸ் F. R. C. P., D. C. H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவபீடம்] எழுதியது. கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவிபோன்ற அனைத்து சுகாதாரப் பகுதியினர்களுக்கும் ஓர் அரியபுத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம், விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
[இ-4828]

புதிய ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. ரவி அன் ராஜ் சிக் 77, பெரியகடை, யாழ்ப்பாணம். [16597]

புதிய Asia சைக்கிள் (Sport-Model) விற்பனைக்கு உண்டு: தொடர்பு: 15, சின்னக்கடை வீதி, யாழ்ப்பாணம்.
[16610]

### மலிவு விற்பனை
### CLEARENCE SALE

20-4-91 முதல் 30-4-91 வரை A/L, O/L ஆண்டு 5 [புலமைப் பரிசில் பரீட்சை] வகுப்புகளுக்கான Tutes மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes 58 A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [16484]

### தேவை

தசதிகள் பயிலுனர் [பெண்] தேவை. அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். டாக்டர் திருமதி S. இராஜேஸ்வரன், பலாலிவீதி திருநெல்வேலி வடக்கு [16604]

### மணமகள் தேவை

யாழ். இந்து ஆசிரியருக்கு [வயது 30 தனியார் ஸ்தாபன உரிமையாளர்] தோஷமற்ற மணமகள் தேவை. கடிதத்தில் விவரங்களை குறிப்பிடவும். சாயிராம் தொடர்பு: இல. 306. மே/பா உதயன், யாழ்ப்பாணம். [16477]

### புலமைப் பரிசில் பரீட்சை [ஆண்டு 5]

சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுக்கும் புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் மாதிரி புலமைப் பரிசில் பரீட்சை (முதலாவது) வெளி மாணவர்களுக்கானதும் [மூன்றாவது] உள்ள மாணவர்களுக்குமானதுமான பரீட்சை 28 04-91 ஞாயிறுமு.ப. 8 00, மு ப.10-30 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும்: புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்! [16561]

### ஆங்கில வகுப்பு

ஆங்கில மொழியை கசடறக்கற்க வேண்டுமாயின் உங்கள் வசதிகளுக்கேற்ப வகுப்புகள் 1 - 5 - 1991 ஆரம்பமாகவுள்ளன. O/L இற்கான விசேட வகுப்புகள் நடைபெறவுள்ளன. செல்வி M. பாலசிங்கம் 21/2, அம்மன் வீதி, சுந்தர்மடம்.
[16551]

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் தனிப்பட்டவர்களுக்கான ஆரம்ப அறிவிலிருந்து நடத்தப்படும் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் தினமும் காலை 10 00 மாலை 2 00 மணிவரை நடைபெறும். உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்புகொள்ளவும், S. ஜெயராஜா, 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
[16572]

### மணமகன் தேவை

A/L சித்தியடைந்த யாழ். இந்து வயது 30 நட்சத்திரம் கேட்டை கனடாவில் வசிக்கும் செவ்வாய்க் குற்றமுள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 309, மே/பா உதயன் யாழ்ப்பாணம்.
[16614]

இந்து 7 இல் செவ்வாய் ராகு சனி கூடின பெண்ணுக்கு பொருத்தமுடைய செவ்வாய் உள்ள பட்டதாரி மணமகன் தேவை. பெண் 5' 4'' உயரம் Fair in Complexion இல-305, C/o உதயன் யாழ்ப்பாணம்.
[16501]

### A/L கணக்கியல் கோட்பாடுகள்

A/L கணக்கியல் கோட்பாடுகள் வெளிவந்து விட்டது. ஆக்கியோன் N ராஜன் B Com விலை 25/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, பிறீமன் கல்வி நிலையம். [4035]

### தாதி பயிலுனர்

தாதி பயிலுனர் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். திருமதி J சொரிணசிங்கம், மெடிக்கல் கிளினிக், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. [16612]

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எவ். ரி மெடிக்கல்ஸ் 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [4026]

---

உள்ளூரில் விளையும் சோயா, உழுந்து அரிசியிலிருந்து தயாரிக்கப்பட்டது

## ★ ஜீவாகாரம் ★

குழந்தைகளுக்கு 4ஆவது மாதத்திலிருந்து ஊட்டுவதற்கேற்றது.

100 கிர் மாவில் 16. 5 கி. புரதமும், 400 கி. கலோரி சக்தியும் அடங்கியுள்ளன.

மேலும் இதில் உடம்பிற்குத் தேவையான விட்டமின்களும், மினறல்களும் அடங்கியுள்ளன.

பெற்றுக் கொள்!

**அண்ணா கோப்பிக்கடை,**
யாழ்ப்பாணம்.
[இ-4903]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## 91 மீட்டல் SAT., & SUN.
## ஆரம்பம்: 28-04-91
(காலை 8-00 மணி)

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:-

| | |
|---|---|
| பொருளியல் | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | திரு. தேவராஜா |
| கணக்கியல் | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | திரு. சுப்பிரமணியம் |
| இந்து நாகரீகம், இந்து சமயம் | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | திரு. குழந்தை |
| புவியியல் | திரு. குணராஜா |
| சரித்திரம் | திரு. விஜயன் |

மு. குறிப்பு:-
i அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
ii கலை, வர்த்தக வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

[இ-4845]

---

## 5 ஆம் வருட நினைவஞ்சலி



## கந்தசாமி நித்தியானந்தன் [B. Sc.]

[வீரவேங்கை கப்டன் அலெக்ஸ்]

தாயின் மடியில்: 31-03-1958
தாயக மண்ணில்: 27-04-1986

வேங்கையின் வீரனாக விண்ணதிரத் துப்பாக்கி தாங்கையில் ஏந்தியுயர் தாயகம் காண்பதற்கு தாங்காது தோள்கொட்டி தோழரெனும் வேங்கைகளுடன் நீங்காது நின்னுயிரை நீத்தான் நித்தியானந்தன்.

தாய் தந்தை, சகோதரர்கள், நண்பர்கள்.

நித்தியானந்தன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[16601]

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் நாகமணி சிவஞானம்

அன்னையின் அரவணைப்பில்: 30 - 05 - 1944
இறைவனின் திருப்பாதத்தில்: 12 - 05 - 1987

திதி:- 27 — 04 — 1991

அன்பு மகனே! அருமைச் செல்வமே!
நீ எமக்கு விடை கொடுத்து இன்றுடன்
ஆண்டுகள் நான்கு ஆனதுவா,
நேற்றைய கனவுபோல் நினைவில் எமக்கு
ஆற்றாது அழுகின்றோம் - எம்மை
தேற்ற நீ இங்கே ஓடி வரமாட்டாயா?
விழியோரங்கள் கசிந்துருக
நினைவெல்லாம் நின்னதுவாகி
நிஜமாய் மரணிக்காமல்
நித்தமும் நாம் மரணிக்கின்றோம்.
எம் துயரம் உன் செவி ஏறாதா?
எம் கண்ணீரும் ஒருநாள் கரைதான் காணாதா?
உமது ஆன்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டும்!

அப்பா, அம்மா, மனைவி, மகன்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மருமக்கள், உறவினர்கள்.

புதுத்தோட்டம்.
தெல்லிப்பளை.
[4038]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவசக்தி வழிபாட்டுப் பாரம்பரியம் காட்டும் கலைக்கருவூலமாக நவகோணச் சித்திரத் தேர்

## திருநெல்வேலி அரசடி அம்பாள் கோவிலில் இந்தச் சிறப்புத் தேர் இன்று பவனி வருகிறது

உலகில் தோன்றி வளர்ந்துள்ள புராதன வழிபாட்டு முறைகளுள் சக்தி வழிபாடும் ஒன்றாகும். இச்சக்தி வழிபாடானது பொதுமக்களிடையே அன்னை வழிபாடு, அம்மை வழிபாடு, அம்மன் வழிபாடு அம்பாள் வழிபாடு, ஈஸ்வரி வழிபாடு எனப் பல பெயர்களில் வழங்கப்படுகின்றது. அகிலாண்டேஸ்வரி என அழைக்கத்தக்க விதத்தில் அகிலமெங்கும் இவ்வழிபாடு பரந்து விளங்குகின்றது.

ஈழத்திலும் இவ்வழிபாடு சிறந்து விளங்குவதை இங்கு கிடைக்கும் பல வரலாற்று மூலங்கள் உறுதி செய்கின்றன. ஈழத்தில் இவ் வழிபாடு சிறந்து விளங்கும் சக்திக்கே உரிய திருத்தலங்கள் பல காணப்படுகின்றன. அவற்றுள் திருநெல்வேலியில் 'அண்டிபுலம்' என்ற இடத்தில் அமைந்து விளங்கும் 'அரசடி அம்மன் கோயில்' சக்திக்கேயுரிய பிரசித்தி பெற்ற திருத்தலங்களுள் ஒன்றாகும்.

இக்கோயில் ஆயிரத்தி எண்ணூற்றி நாற்பத்தி நான்காம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதாக யாழ்ப்பாணக் கச்சேரியில் உள்ள கோயிற் பதிவு இடாப்புக் குறிப்பிடுகின்றது. இவ் அரசடி அம்மன் கோயில் தற்போது ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் தேவஸ்தானம் எனப் பெயர்பெற்று விளங்குகின்றது.

சுமார் நூற்றைம்பது வருடங்கள் பழமையுடன் விளங்கும் இத்தேவி ஆலயமானது கிழக்கு நோக்கிய சந்நிதியுடனும் அரசு, வேம்பு, வில்வம் ஆகிய மரங்களைத் தலவிருட்சங்களாகக் கொண்டும் காணப்படுகின்றது. அரசும், வேம்பும் இணைந்து பிணைந்து விளங்குவது இத்தலத்திற்குரிய தனிச்சிறப்பாகும்.

### கருவறையில்

கின்னஞ்சிறு பெண்போல சிற்றாடை உடை உடுத்தி இரண்டு கரங்களுடன் நின்ற நிலையில் விளங்கும் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளின் சிலா விக்கிரகமே இவ்வாலயத்தின் கருவறைக்குள் காணப்படுகின்றது.

மந்திரம், தந்திரம், யந்திரம் என்ற சாக்த வழிபாட்டு மரபுகள் சிறப்புற்று விளங்கும் இத்திருத்தலத்தில், ஈழத்தில் முதன் முதலாக நிர்மாணிக்கப்பட்ட நவகோண வடிவமான சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா 1991-04-26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை [நேற்று] வெகு சிறப்பாக நடைபெற்றது.

இவ்வைபவத்தில் ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டனர். எல்லோரும் வடம் தொட்டு வெள்ளோட்டத் தேர் இழுத்த காட்சி 'சமரசம் உலாவும் இடமாக' இவ்வாலயம் விளங்கும் என்பதனை உணர்த்தி விட்டது.

### இன்று தேர்த் திருவிழா

புதிய நவகோணச் சித்திரத்தேர்த் திருவிழா 27-4-1991 ஆம் திகதி சனிக்கிழமை [இன்று] காலை எட்டு மணியளவில் நடைபெற திருவருள் கூட்டியுள்ளது. இவ்விடத்தில் இரதோற்சவம் பற்றிச் சிறிது குறிப்பிடுதல் அவசியமாகின்றது.

உற்சவம் என்பது உத்தம யாகம் எனவும், மேலான பஞ்சகிருத்தியம் எனவும், சிருஷ்டி மார்க்கத்தைக் குறிப்பது எனவும் பொருள்படும். இவற்றுள் இரதோற்சவம் என்ற தேர்த்திருவிழாவானது சிருஷ்டி முதலிய பஞ்சகிருத்தியங்களுள் சங்காரத்தைக் குறிக்குமென ஆகமங்கள் கூறுகின்றன.

எல்லா ஆன்மாக்களுக்கும் திரிபுரசங்காரத்தின் உண்மைக் காட்சியை உணர்த்தி அவ்வான்மாக்களைப் பற்றி நிற்கும் மும்மலங்களையும் நீக்கியருளும் குறிப்பாகவே இரதோற்சவம் நிகழ்த்தப்படுகின்றது. இத்தனைய சமய - தத்துவ முக்கியத்துவமுடைய தேர்த்திருவிழாவானது நவகோண வடிவமான சித்திரத்தேரில் இவ்வாலயத்தில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.



ஈழத்து இந்து ஆலயங்களில் பலவகையான தேர்கள் காணப்படுகின்றன. அவற்றுள் இல்லாத தனிச் சிறப்பு இத் தேருக்கு உண்டு. கோயிற் சட்டடக் கலையை நாகரம், வேசரம், திராவிடம் எனப் பிரிப்பது போன்று தேரின் அமைப்பு முறைகளை ஒட்டியும் அவற்றை நாகரம்

எம். வேதநாதன் எம். ஏ,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

என்றும், வேசரம் என்றும், திராவிடம் என்றும் பிரிக்கலாமென சிற்ப நூல்கள் குறிப்பிடப்படுகின்றன. சதுர வடிவமான தேரை நாகரம் என்றும், வட்டவடிவமான தேரை வேசரம் என்றும், எண்கோணவடிவமான தேரை 'திராவிடம்' என்றும் கலை கூறுகின்றன.

### இளம் கவிஞரின் கைவண்ணம்

இவ்வாலயத் தேரானது நவகோணவடிவமாக விளங்குவது ஈழத்து தேர்க்கலை வரலாற்றில் குறிப்பிடத்தக்கதோர் வளர்ச்சிக்கட்டமாகும். எமது பாரம்பரிய கலாசாரத்தின் சின்னமாக விளங்கும் தேவிக்குரிய இத்த சித்திரத்தேரை நிர்மாணித்த திருநெல்வேலி அர்த்தநாரீஸ்வரர் சிற்பாலயஸ்தபதி செல்வன் பத்மநாதன் - சுரேந்திரன் [இந்திரன்] அவர்களையும், அக்குழுவினரையும் நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

இருபத்தாறு வயது நிரம்பிய இவ்விளங்கலைஞர் இருபத்தொன்பதடி உயரம் கொண்ட நவகோண வடிவமான சித்திரத்தேரைப் புதிய முறையில் அமைத்துள்ளார். இத்தேரின் விமானமும் ஈழத்துத் தேர்களில் இல்லாத புதுமுறையானது. திராவிடக் கட்டடக் கலைக்குப் புதுமெருகூட்டி இச் சிற்பி இத்தேரை அமைத்துள்ளார் எனலாம்.

சக்திக்கும் நவகோண வடிவமான சித்திரத் தேருக்கும் மிகவும் நெருக்கமான தொடர்பு காணப்படுகின்றது. சக்திக்கு நவகோண வடிவமான சித்திரத் தேரே மிகவும் பொருத்தமென்று கூற முடியும். ''வீற்றிருப்பாள் நவகோணத்திலே'' என்று வராகி மாலையிலும், மீனாட்சி கலிவெண்பாவிலும் தேவி கூறப்பட்டுள்ளாள். 'ஒளி நின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே' என அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியில் தேவியைப் பாடியுள்ளார்.

சக்தி மிகவும் விரும்பி உறைகின்ற இடமாகிய 'ஸ்ரீ சக்கரமும்' ஒன்பது சக்கரங்களைக் கொண்டே விளங்குகின்றமை குறிப்பிடற்பாலதாகும். அது ஐந்து சக்தி கோணங்களும் நான்கு சிவ கோணங்களுமென ஒன்பது கோணங்களைக் கொண்ட புனிதச் சின்னமாகும். சக்தி கோணங்கள் கீழ்நோக்கியும், சிவகோணங்கள் மேல் நோக்கியும் விளங்குகின்றன. மேல் நோக்கிய கோணங்கள் வழிபடுகின்றவர்களின் உயர்ந்த இலட்சியத்தைக் குறித்து நிற்கின்றது.

முக்கோணம் கீழ்நோக்கியிருப்பது பராசக்தியின் அம்சமாகும். 'சிவசக்தி ஐக்கிய ரூபிணி' என்ற நாமத்தைப் புலப்படுத்துவது போல ஸ்ரீ சக்ரராஜ நிலயா என்ற நாமத்துக்கேற்றவாறு நவகோண வடிவமான இத் தேரில் தேவியின் பீடமும் நவகோணமாகவே அமைக்கப்பட்டுள்ளமை சிறப்புக்குரியதாகும்.

'சக்திதான் பலவோ என்னின் தான் ஒன்றே அனேகமாக வைத்திடும் காரியத்தால்' எனச் சிவஞானசித்தியார் குறிப்பிடுகின்றது. எனவே சக்தி ஒருத்தியேயாயினும் தொழில் வேறுபாட்டால் அவ்வவை எடுக்கும் சக்திபேதங்கள் அநேகமாகும். அவற்றுள் சக்தியின் நவபேதங்களே மிகவும் சிறப்பு உடையவை எனலாம்.

காரணாகமத்திலும், ஸ்ரீ தத்துவ நிதி என்ற சிற்பநூலிலும் நவதுர்க்கைகள் பற்றிய விபரங்களைக் காணமுடிகின்றது. மனோன்மணி, சர்வபூததமனி, பலப்பிரதமனி, கலவிகரணி, பலவிகரணி, காளி, இரவுத்திரி, சேட்டை, வாமை என்ற ஒன்பது சக்திகளையும் நவசக்திகளாக வழிபடுவது சைவ - சாக்த பாரம்பரியமாகும்.

இப் பாரம்பரிய கலாசாரத்தைக் காட்டும் கலைக்கருவூலமே திருநெல்வேலி அரசடி அம்பாள் ஆலய நவகோண வடிவமான சித்திரத் தேராகும். இதனை செய்தவர்கள் - செய்வித்தவர்கள் - இதற்கு உதவியவர்கள் எல்லோருக்கும் சர்வமங்களங்களும் கிடைக்க வேண்டுமென தேவியைப் பிரார்த்திப்போமாக.

★

[16515]

சுன்னாகம்
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்
சித்திரத் தேர் வெள்ளோட்டமும்
மகோற்சவமும்
கலாகேசரி திரு. A. தம்பித்துரை
அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டு வரும் புதிய சித்திரத் தேர் எதிர்வரும் 14 - 06 - 1991 வெள்ளோட்ட வைபவம் நடைபெற உள்ளது.
இதன் காரணமாக இவ்வருட மகோற்சவம் 8-7 1991 செவ்வாய்க்கிழமை முதல் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 10 தினங்கள் சிறப்பாக நடைபெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
[சி-5145] நா. சர்வேஸ்வரக்குருக்கள்.

கம்பியூட்டர் பயிற்சி
யாழ் - மல்லாகம் ஒருங்கிணைப்பட்டு
மானிப்பாயில் IDP
சேவை ஆரம்பமாகிறது.
BASIC, d BASE - III+ COURSES
புதிய பிரிவுகள்: 28-04-1991
★ பதிவுகள் சலுகை முறையில் 10% கழிவுடன் ஏற்கப்படும்.
Managing Director K. THALAYASINGAM
Administrator T. CHANDRAKUMAR
IDP Computer Centre
Manipay Road, Manipay.
[மானிப்பாய் ஆஸ்பத்திரி சமீபமாகவுள்ள மேல்மாடி]
★ மாணவர்களின் நலன்கருதி Spoken English வகுப்புகள் நடைபெறும்.
[இ-5119]

### தேர் திருவிழாக்கள்

நல்லூர் கைலசபிள்ளையார் கோவில் விநாயகப் பெருமானின் வருடாந்த தேர்த் திருவிழா இன்று காலை நடைபெறுகிறது.

காலை 7-30 மணிக்கு வசந்தமண்டபப்பூசை ஆரம்பமாகி சுவாமி 9-00 மணிக்கு தேரில் ஏறுவார். 9-15 மணிக்கு தேர் பவனி ஆரம்பமாகும்.

★

வண்ணை, ஸ்ரீ காமாட்சி அம்பாள் [நாச்சிமார்] கோவில் இரதோற்சவமும் இன்றாகும். காலை 9-30 மணிக்கு அம்பாள் ரதத்தில் ஆரோகணித்து எழுந்தருளுவார்.

★

கொண்டாவில் நெட்டிலைப் பாய்பிள்ளை ஆலய வருடாந்த தேர்த் திருவிழாவும் இன்று நடைபெறுகிறது. விநாயகப் பெருமான் காலை 8-00 மணிக்கு தேரில் ஏறி பவனி புறப்படுவார்.

★

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும் இதில் விசேஷமாக இரண்டு தேர்களில் பிள்ளையாரும், முருகனும் எழுந்தருளுவார்கள்.

★

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் வீரகத்தி விநாயகர் ஆலய தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே இன்றும் நாளையும் நடைபெறும்.

[அ-த]

நீராவியடி
வண்-வட கிழக்கு சனசமூக நிலைய
நிதி உதவிக்காக
26 - 05 - 1991 யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில்
கதக்களி பரதநாட்டியம்
புலவர் தட்சணாமூர்த்தியின்
சங்கிலியன் (சரித்திர நாடகம்)

''கதக்களி பரத கலாமணி''
இலங்கை வேந்தனின் நடனத்தோற்றம்
அன்பளிப்பு:
கதிரவன் ரேடிங்சென்ரர்,
144, மொடேன் மார்கற், ஆஸ்பத்திரி வீதி.
[16600]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
03 - 09 - 1936

மறைவு:
28 - 03 - 1991

அமரர்
### சண்முகம் சர்வலோகநாயகி
[தாச்சி]

சிவபதமெய்திய அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

தாய், சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர்கள்,
மைத்துனி, பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[4039]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்டினன்ட் க. தவக்குமார்
[முரளி சாள்ஸ்]

அன்னை மடியில்: 10 - 04 - 1963
அன்னை முடிவில் 27 - 04 - 1988
திதி: 24 - 04 - 1991

சுதந்திரம் வேண்டி நின்றோர் தோற்றதோர் சரிதமில்லை
இதந்தரு தாயின் மண்ணில் அந்நியர் ஆட்சி போக்க
விதந்துநீ பாடுபட்டே வீரனாய் வின்சென் றிட்டாய்
இதந்தரு தவக்குமாரே உன்பணி தொடருதையா
அன்புடைத் தவக்குமாரே அருமைசேர் செல்வமே நீ

துன்புற எமைப் பிரிந்து சென்றதே ஆண்டு மூன்று
இன்புறும் வயதில் மண்ணை மீட்போர் இலட்சியத்தால்
முன்புற வீரவேங்கை யாயினை மண்ணின் மீதே.

உன்னுடன் மண்ணை மீட்க உழைத்த நல்
மோகன் மாஸ்ரர்

சின்னவோர் வேங்கை பட்சம் சேர்ந்து நீர்
சென்ற போதும்
பின்னணி பெருகுதையா பாய்கின்ற வேங்கைக் கூட்டம்
செசன்னவோர் தமிழ் ஈழந்தான் தோற்றுதல்
திண்ணமய்யா.

அப்பா, அம்மா, அண்ணா,
அண்ணி, அக்கா, அத்தான், குட்டி மருமகன்,
உறவினர்கள், நண்பர்கள்,

''ஜெயமலர் அகம்''
தவக்குமார் வீதி,
கப்புது, சாவெட்டி.

[16558]

## தமிழரின் தாகம் கவிதை நூல்

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் எழுதிய 'தமிழரின் தாகம்' கவிதை நூலை தமிழ்த் தாய் பதிப்பகத்தினர் வெளியிட்டுள்ளனர்.

திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னி, மன்னார், மலையகம், யாழ்ப்பாணம் ஆகிய தமிழ்ப் பிரதேசங்களின் அவலங்களையும், மண் மீட்புப் போர் பற்றிய விவரங்களையும் சித்தரிக்கும் குறுங்காவியமாக ''தமிழரின் தாகம்'' வெளிவந்துள்ளது.

அன்புடையீர்,
### தொழிலாளர் கல்வித் தொடக்க விழா

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் புதிதாக ஆரம்பிக்கவுள்ள தொழிலாளர் கல்விச் சான்றிதழ்ப் பயில்நெறியின் தொடக்க விழா 01-05-1991 புதன்கிழமை முற்பகல் 8-00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் இப்பயில்நெறியைத் தொடக்கி வைப்பார்.

இவ்விழாவுக்கு வருகை தருமாறு தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

— பதிவாளர்.
[C/5141]

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பயில்நெறி 1990/91

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பயில்நெறிக்கு 101 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களது சொந்த முகவரிக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன குறிப்பிட்ட பாடநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது பதிவிற்கான ஆவணங்களுடன் பல்கலைக்கழகத் தேர்வுகளும், அனுமதிகளும் இளைக்கு 1991-04-29 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 9 00 மணிக்கு நேரடியாகச் சமுகமளிக்கவும்.

மேற்கூறப்பட்ட திகதியில் பதிவு செய்யத் தவறிய மாணவர்கள் பதிவு செய்யத் தவறியவர்களாகக் கருதப்படுவர்.

தொழிலாளர் கல்விச் சான்றிதழ்ப் பயில்நெறியின் தொடக்க விழா 1991-05-01 புதன்கிழமை முற்பகல் 8-00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

— பதிவாளர்.
25-04-1991
[C/5140]

யா / ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்
### முக்கிய அறிவித்தல்

சகல ஆங்கில மருந்து வர்த்தகர்களும் 10-05-1991 க்கு முன் தங்கள் சந்தாப்பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

கௌரவ செயலாளர்.

எஸ்ரி மெடிக்கல்ஸ்,
490, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
[4038]

## யூனிவேர்சல்
### பழைய மாணவர் கலந்துரையாடல்

எமது கல்வி நிறுவனத்தின் பழைய மாணவ, மாணவிகள் அனைவரும் 29-4-91 [திங்கள்] பிற்பகல் 4 - 30 மணிக்கு நிறுவனத்தில் நடைபெறும் பழைய மாணவர்களுக்கான கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளவும்.

நிர்வாக இயக்குநர்,
யூனிவேர்சல்
சுந்தரமடம்,
யாழ்ப்பாணம்.
[சி/5142]

## பாரதிதாசன்
### கல்வி நிறுவனம்
[முன்னை நாள் BECON]
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 91 DAY CLASSES

முழுப் பாடத்திட்டம்;
வினா - விடை வகுப்புகள்

8-00 — 9-00 பொருளியல்: திரு. வரதராஜன்
9-00 — 10-00 அளவையியல்: திரு. S. S. மனோகரன்
10-00 — 11-00 வர்த்தகம்: திரு. லோகசிங்கம்
11-00 — 12-00 கணக்கியல்: திரு. சௌந்தி

ஆரம்பம்: 29-04-1991
திங்கட்கிழமை 8.00 மணி

## A/L 91 சனி, ஞாயிறு வகுப்புகள்

மீட்டல் வினா - விடை

| | | | |
|---|---|---|---|
| பொருளியல்: | 12.00 | - | 1.00 |
| அளவையியல்: | 1.00 | - | 2.00 |
| கணக்கியல்: | 2.00 | - | 3.00 |
| வர்த்தகம்: | 3.00 | - | 4.00 |

ஆரம்பம்: 28-04-1991
ஞாயிற்றுக்கிழமை

[சி-5135]

## 5 ஆம் ஆண்டு வீர அஞ்சலி



வீரஜனனம்:
18 - 10 - 964

வீரமரணம்:
27 04 - 1986

### லெப்டினன்ட் தெய்வா
[ஐயாத்துரை-சிவநாதன்]

மாதகல் மண் உதித்து
தமிழர் மானம் காக்க!
மாதவம் செய்த ''தெய்வா'' உன்வரலாறு
மாணிக்கக் கல்வெட்டாகட்டும்!

தெய்வா படிப்பகத்தினர்.
துறைமுகம், மாதகல்.
[16598]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கிளிநொச்சி ஆஸ்பத்திரி

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரிய வைத்தியசாலையாக விளங்குவது நகரில் அமைந்திருக்கும் அரசினர் ஆஸ்பத்திரி ஒன்றே. ஏனைய அரசாங்க சிகிச்சை நிலையங்கள் யாவும் போதிய வசதிகள் இல்லாத, சிறிய அளவிலான 'டிஸ்பென்சரி'களே. அவ்வாறிருந்தும் கிளிநொச்சி பெரியாஸ்பத்திரி ஒரு மாவட்ட மக்களின் வைத்தியத் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு அபிவிருத்தி செய்யப்படாமல் இருப்பது நீண்ட காலக் குறைபாடு. கவலைக்குரிய விடயமும் ஆகும்.

கிளிநொச்சி ஒரு விவசாய மாவட்டம். குடியேற்றத் திட்டங்களை உள்ளடக்கிய பிரதேசம். இப்போதுதான் மெதுமெதுவாகக் கிராம மட்டத்துக்கு வளர்ச்சி அடைந்து வரும் பிரதேசம். கல்வி, வைத்தியம், போக்குவரத்து, தொலைத் தொடர்பு என்பன வேண்டிய அளவில் இல்லாமல் ஏற்கனவே மத்திம நிலைக்கும் கீழாக இருந்த பகுதி. தமிழ்ப் பிரதேசம் என்ற காரணத்தால், அது கடந்த நாற்பது வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாமல் பின்தங்கவிடப்பட்டுள்ளது.

அதன் காரணமாக, உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்று முக்கிய அடிப்படைத் தேவைகளுக்கும் உடன் அடுத்த அத்தியாவசிய தேவையான வைத்திய சேவை கிளிநொச்சியில் மிக மந்த நிலையிலேயே காணப்படுகிறது. மலேரியா, மூளைக் காய்ச்சல் போன்ற ஆபத்தான தொற்று நோய்கள் இலகுவில் பரவி மக்களின் தேகாரோக்கியத்தை கெடுத்துவிடும் அதிக சாத்தியம் உள்ள பிரதேசமாகக் கிளிநொச்சி விளங்குகிறது.

அப்பகுதியின் சுகாதார, வைத்தியசேவைகள் திட்டமிட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது அவசியம்.

மேலே கூறியது போன்று கிளிநொச்சிக்குரிய சுகாதார வைத்திய சேவைகள், நீண்ட காலமாகவே சீர்செய்யப்படாமல், கீழ்மட்ட நிலையில் ஏற்கனவே இருந்தன. கடந்த ஜூன் மாதத்தில் யுத்தம் தொடங்கிய பின்னர் நிலைமை மோசமடைந்தது.

ஆஸ்பத்திரி என்று சொல்வதற்கு ஓரளவேனும் தகுதியாக இருந்த மாவட்ட ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் முதல் சிற்றூழியர் வரை, மருந்து முதல் ஏனைய வசதிகள் வரை பற்றாக்குறையும், தட்டுப்பாடும் நிலவுகின்றன.

இதனால் சிறிய வியாதிகளுக்குக் கூட உரிய சிகிச்சை பெற முடியாமல் மக்கள் அவலப்படுகிறார்கள். இது குறித்து கொழும்பில் உள்ள சுகாதாரப் பகுதி கவனம் எடுக்கும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

தொண்டர் நிறுவனங்கள், மற்றும் சமூக நல அமைப்புகள் இவ் விடயத்தில் கவனம் எடுக்க வேண்டிய கடமைப்பாடு உண்டு. ஏற்கனவே அங்கு ஓரளவு உதவிவரும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவும் ஏனைய தொண்டர் நிறுவனங்களும், கொழும்பு அரசினால் புறக்கணிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி ஆஸ்பத்திரியின் நிலையை மேம்படுத்தமேலும் உதவலாம். மனிதாபிமான அடிப்படையில் கிளிநொச்சி மக்களை நோய் நொடிகளில் இருந்து காப்பாற்ற, ஏனைய தமிழ்ப் பகுதி மக்களும் உதவ வேண்டும். அது காலத்தால் செய்த பேருதவியாக அமையும்.

## இலங்கையர் கைது

சென்னை, ஏப். 27

தனுஷ்கோடி கடற்கரையில் புதைக்கப்பட்டிருந்த இரண்டு ஏ. கே 47 துப்பாக்கிகளையும் ரவைகளையும் பொலீஸார் கைப்பற்றினர்.

அது தொடர்பாக இலங்கைப் பிரஜை ஒருவர் தமிழ்நாடு பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். [இ-எ]

## பண்டாரியும் களத்தில்

புதுடில்லி, ஏப். 27

முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி, புதுடில்லி தெற்கு லோகசபைத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட நேற்று வேட்பு மனுத்தாக்கல் செய்தார்.

இவர் கடைசியாகப் புதுடில்லி துணை நிலை ஆளுநராகப் பணிபுரிந்தார். [உ-எ]

## கலந்துரையாடல்

மானிப்பாய், ஏப் 27

வடபிராந்திய கருட்டுத் தொழிலாளர் சங்கத்தினர் இன்று பிற்பகல் 3மணிக்கு கொக்குவில் மேற்கு ஞான பண்டிதர் வித்தியாசாலையில் மேதின ஊர்வல ஒழுங்குகள் குறித்து ஆராய கலந்துரையாடல் ஒன்றை நடத்துகின்றனர். [ஓ-90]

# சட்டசபை தொகுதி ஒன்றில் 301 பேர் வேட்பு மனுக்கள்!

சென்னை, ஏப். 27

தமிழ்நாடு சட்டசபையில் உள்ள 234 தொகுதிகளில் போட்டியிடுவதற்காக 2 ஆயிரத்து 500க்கு மேற்பட்டோரும்—

39 லோகசபைத் தொகுதிகளில் போட்டியிடுவதற்காக 350க்கு மேற்பட்டோரும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

அவரக்குறிச்சி சட்டசபைத் தொகுதியில் போட்டியிட வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தோரின் எண்ணிக்கை 301 என்று அறிவிக்கப்பட்டது.

முன்னாள் முதலமைச்சர் மு கருணாநிதி போட்டியிடும் துறைமுகம் தொகுதியில் 32 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

ஒரு சட்டசபைத் தொகுதியில் 102 வயது பெண் ஒருவரும் வேட்பு மனுத்தாக்கல் செய்தார்.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வது நேற்றுடன் முடிவடைந்தது. எனினும் வேட்பு மனுக்களை வாபஸ் வாங்கும் காலக்கெடு எதிர்வரும் திங்கட்கிழமையுடன் முடிவடைகிறது. [உ-எ]

# சிக்கியோரை மீட்டுத் தர உறவினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 27

காரைநகரில் ஸ்ரீலங்கா படையினரிடம் சிக்கியுள்ள அப்பாவிப் பொதுமக்களை மீட்டுத் தருமாறு அவர்களது உறவினர்கள் நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் நேரடியாகச் சென்று கோரிக்கை விடுத்தனர்.

நேற்று பலர் காரைநகரில் சிக்கியுள்ள தமது உறவினர்களின் பெயர்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்தில் பதிவு செய்தனர்.

இதேவேளை —

காரைநகர்ப் பகுதியில் ஆயிரக்கணக்கானோர் படையினரிடம் சிக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஓ 3]

## உரை வகுப்புகள்

பருத்தித்துறை, ஏப்ரல் 27

கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராண படன உரை வகுப்புகள் கரவெட்டி கோவிற் கடவை அறநெறி மன்றத்தினரால் மே மாதம் முதலாம் திகதி நடத்தப்படவுள்ளன. [இ-த-118]

# இராணுவத் தீர்வை...

சியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

### நிதி நெருக்கடி

தற்போதைய சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைகள் குறித்து அவதானிகள் தெரிவித்த விடயங்கள் வருமாறு:—

★ பத்து மாதங்களுக்கு மேலாக நடந்து வரும்; யுத்தத்தினால் ஏற்பட்ட செலவினங்களைத் தொடர்ந்தும் சமாளிக்க முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க முடியாத இக்கட்டு அரசுக்கு.

### உதவும் நாடுகளின் கூட்டம்

★ இந்நிலையில் இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஜூன் இறுதி வாரத்தில் அல்லது ஜூலை முதல் வாரத்தில் நடைபெறவிருக்கிறது.

கடந்த வருடத்திலும் பார்க்க இம்முறை கூடிய தொகை நிதியை வழங்குவதற்கு ''உதவும் நாடுகள்'' முன் வந்தால் மட்டுமே அரசு தனக்குள்ள பொருளாதார நெருக்கடியை ஓரளவேனும் தாக்குப் பிடிக்க முடியும்.

ஆனால் வடக்கு, கிழக்கில் சமாதான சூழ்நிலை தோன்றுவதற்கான வாய்ப்புகள் தென்படாத வரை உதவும் நாடுகள் இம்முறை நிதி உதவி வழங்கப் போவதில்லை. கடந்த வருடத்திய கூட்டத்திலேயே 'உதவும் நாடுகள்' இந்த விடயத்தை ஸ்ரீலங்கா அரசுக்கு திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தி இருந்தன.

ஆகையினால் இம்முறை உதவும் நாடுகள் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி, சமாதானம் தோன்றுவதற்கான வாய்ப்புகள் இருப்பது போன்ற ஒரு வெளிப்பாட்டுத் தோற்றத்தை ஏற்படுத்த வேண்டிய இக்கட்டான நிலை ஸ்ரீலங்கா அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

### சர்வதேச அழுத்தம்

ஸ்ரீலங்கா படைகளின் மனித உரிமை மீறல்கள், பொதுமக்கள் வாழும் பகுதிகளில் விமானக் குண்டு வீச்சு மற்றும் இராணுவ நடவடிக்கைகள் போன்றவற்றினால் ஸ்ரீலங்கா அரசு ... டிருக்கும் அபகீர்த்தியும் ''உதவும் நாடு''களை உதவி வழங்காமல் பின்னடையச் செய்திருக்கின்றன.

படைகளின் நடவடிக்கைகள் சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புகளின் வெறுப்பை ஸ்ரீலங்கா அரசுக்கு சம்பாதித்துக் கொடுத்துள்ளன. அது மட்டுமல்ல, இராணுவ வழிமுறையைக் கைவிடுமாறு ஸ்ரீலங்கா அரசு மீது சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவும் அவை காரணமாகியுள்ளன.

★ இந்தியத் தேர்தல் முடிந்து அங்கு புதிய — வலுவான — அரசு ஏற்பட்டால், அந்த அரசு ஈழத்தமிழர் பிரச்சினையில் நெருக்கடியைத் தரக்கூடிய தலையீடுகளைச் செய்யக் கூடும் என்று ஸ்ரீலங்கா அரசு கருதுகிறது. அதனால் புதிய இந்திய அரசு உருவாவதற்கு முன்னரே, இராணுவ முறை அல்லாத ஒரு தீர்வுக்கான முன் முயற்சி எடுக்கப்படுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த ஸ்ரீலங்கா அரசு விரும்புகிறது.

### இராணுவப் பின்னடைவு

★ தொடர்ந்து ஸ்ரீலங்காப் படைகளுக்கு இராணுவ ரீதியாக ஏற்பட்டுவரும் பின்னடைவுகள் இராணுவத்தின் மனநிலையைப் பெரிதும் பாதித்துள்ளன.

தமது உயிரைத் துச்சம் என மதித்து அஞ்சாமல் விடுதலைப் புலிகள் தாக்கி வருவதும், அவர்களின் ஆள் மற்றும் ஆயுத பலம் வேகமாய் அதிகரித்து வருவதும் அரசுப் படை வட்டாரங்களில் பெரும் திகைப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

வடக்கை ஸ்ரீலங்காப் படைகள் கைப்பற்றுவது மிகவும் கஷ்டமான காரியம். அதே போன்று இழக்கிலும் அதிகரித்து வரும் புலிகளின் தாக்குதல்கள், அங்கும் படையினரை முகாம்களுக்குள் முடங்கச் செய்யும் நிலைக்கு அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தள்ளிச் செல்கின்றன.

இராணுவம் இத்தகைய பின்னடைவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் போது நாட்டின் தலைவர் ''எனக்கு யுத்தத்தில் நம்பிக்கை இல்லை. யுத்தத்தினால் வெற்றி காண முடியாது. ... தீர்வு காணவேண்டும்'' என்ற பாணியில் பகிரங்கமாக நாட்டு மக்களுக்கு உரையாற்றி வருவது படையினரின் யுத்த மன நிலையை மேலும் பாதிப்படையச் செய்திருக்கிறது; அவர்களைச் சோர்வடையச் செய்திருக்கிறது.

இத்தகைய பேச்சு படையினர் மனதிலும், இராணுவத் தீர்வினால் பயன் இல்லை என்ற எண்ணத்தைப் பதிய வைப்பதாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் ரஞ்சனின் படுகொலையும், அதன் பின்னர் இராணுவத் தீர்வில் நாட்டமில்லாத தலைவர்களினால் இராணுவம் வழி நடத்தப்பட்டமையும் படையினர் மனதில் இருக்க வேண்டிய உறுதியான போக்கைச் சிதைய வைத்து விட்டன.

இந்தப் பின்னணியில், இராணுவத் தீர்வைக் கைவிடும் முடிவை படையினரும் அவர்களின் தளபதிகளும் கூட பெரிதும் விரும்பி வரவேற்கும் ஒரு சூழ்நிலை தோன்றி வருகிறதாம்.

★ எனினும் இராணுவ நடவடிக்கையில் முன்னேற்றத்தைக் காட்டுவதற்கு ஜனாதிபதி பிரேமதாஸா விதித்த [ஜூன் மாதம் வரையான] காலக்கெடு முடிவடையும் வரை தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி முடுக்கிவிட படையினர் தயாராகவே இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

★ ஆனால் இராணுவத் தீர்வு முயற்சியைக் கைவிடும் மனநிலையில் அரச உயர் வட்டாரங்கள் இருப்பதால் இராணுவ நடவடிக்கை தீவிரப்படுத்தப்படுவது அடுத்து வரும் நாட்களில் குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★ மே மாதம் 11ஆம் திகதி தென்னிலங்கையில் உள்ளூராட்சித்தேர்தல் நடைபெறும் காலம் நெருங்க நெருங்க இராணுவ நடவடிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து செல்லும். பின்னர் ஸ்ரீலங்கா அரசு இராணுவத் தீர்வு அல்லாத ஒரு தீர்வைக் காண்பதற்கான முன் முயற்சிகள் பற்றி அறிவிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

-இவ்வாறு அரசியல் அவதானிகள் தெளிவுபடுத்துகின்றனர். [அ-உ]

## தலையில்லாத சடலங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 27

மட்டக்களப்பு ஊறணிச் சந்தியில் பொலீஸ் நிலையம் அருகில் தலைவெட்டப்பட்ட நிலையில் இரு தமிழ்ப் பொது மக்களின் சடலங்கள் கடந்த வியாழனன்று கண்டுபிடிக்கப்பட்டன. சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

## கிளைமோர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 27

நேற்றுக்காலை 8 மணியளவில் மணற்பிட்டி இராணுவ முகாமிலிருந்து கொக்கட்டிச் சோலைக்கு ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதல் நடத்தினர். படையினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை. [உ]

## சூட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், ஏப். 27

கடந்த வியாழனன்று காலை 7 மணியளவில் கரடியனாறு இராணுவ முகாமிலிருந்து இலுப்படிச்சேனைக்குச் சென்ற படையினர் அப்பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளின் ஆதரவாளரான இரத்தினம் [வயது 40—இலுப்படிச்சேனை] என்பவரைச் சுட்டுக் கொன்றனர்.

அப்பு [வயது 45—கரடியனாறு] என்ற மற்றொரு நபரை படையினர் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர். [உ]

## மே தினத்தன்று பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் புதிதாக தொடங்கவிருக்கும் தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பயிற்சி நெறி எதிர்வரும் புதன்கிழமை மேதினத்தன்று காலை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் துணைவேந்தர் துரைராஜாவினால் ஆரம்பித்து வைக்கப்படும். [உ]

## படகுச் சேவை ஸ்தம்பிதம்

புளியங்கூடல், ஏப் 27

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தீவுப்பகுதிக்கான படகுச் சேவைகள் பெரும் அளவு பாதிக்கப்பட்டுள்ளன.

அராலித்துறையில் நேற்று முன்தினம் காலை ஹெலி ஒன்று பரவலாக வேட்டுக்களைத் தீர்த்ததை அடுத்து படகுச்சேவை ஸ்தம்பிதம் அடைந்தது. பண்ணையிலும் இதே நிலைமையே ஏற்பட்டுள்ளது. [இ-125]

## முறைசாரா கல்விப் பிரிவு கூட்டம்

யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவின் போதனாசிரியர்கள், பத்திரிகைத் துறைப்பயிற்சியாளர்கள் முதலுதவி நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோருக்கான கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும். [ஈ-த]

## கொழும்பில் டெங்கு

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பயங்கர 'டெங்கு' காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாக சுகாதாரப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

நுளம்பினால் பரவும் இந்த வைரஸ் காய்ச்சலினால், பல நூற்றுக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [அ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படை சூடு!

கச்சதீவுக்கு அருகில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் சிலர் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டனர்.

மீனவர்களில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, இராமேஸ்வரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினரின் துன்புறுத்தலில் இருந்து தம்மைக் காப்பாற்றும்படி இராமேஸ்வரம் மீனவர்கள் தமிழ்நாடு ஆளுநர் பீஷ்மர் நாராயணசிங்குக்கு முறையிட்டுள்ளனர். [இ-எ]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்மா செல்வரட்ணம்

திருமதி பொன்னம்மா செல்வரட்ணம் 26-4-91 இல் காலமானார். இவர் திரு. முத்துலிங்கம் செல்வரட்ணம் அவர்களின் அருமைப் பாரியாரும் திரு கைலாசநாதனின் [முருகா] அவர்களின் அருமைத் தாயாரும், திருமதி வசந்தி கைலாசநாதனின் அருமை மாமியாரும், திருமதி ஆறுமுகம் அவர்களின் சகோதரியும், திரு. இராசரத்தினம் [கணக்காளர்] அவர்களின் மைத்துனியும், காலஞ்சென்ற திரு. காசிநாதர் பொன்னுத்துரையின் மகளும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று சனிக்கிழமை [27-4-91] காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. செல்வரட்ணம்

65, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, மேற்கு,
யாழ்ப்பாணம்.

[16618]

### திரு. தெட்சணாமூர்த்தி இளையபெருமாள்

[இளைப்பாறிய இலிகிதரும், வவுனியா சமாதான நீதிவானும்]

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வவுனியா சாஸ்திரி கூளாங்குளம் புதுக்குளத்தில் வசித்தவருமாகிய திரு. தெட்சணாமூர்த்தி இளையபெருமாள் காலமானார்.

இவர் காசிச்சாலாட்சியின் அன்புக் கணவரும், முருகதாசன் [லண்டன்], ஜெயலெட்சுமி [லண்டன்], யோகதாசன் [ஜேர்மனி], ஜெயதாசன், கிருஷ்ணதாசன் [மாலுமி], விஜயலெட்சுமி, காலஞ்சென்ற மோகனதாசன், பத்மலெட்சுமி, யோகலெட்சுமி, குகலெட்சுமி, சிவதாசன், உதயதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், உதயகுமார் [லண்டன்], ஜெயகிருஷ்ணன் [மாலுமி], நகுலேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், சோமசுந்தரம் [வர்த்தகர்], அருணாசலம், குழந்தைவேற்பிள்ளை [ஜேர்மனி], காலஞ்சென்ற விநாயகசுந்தரம், பர்வதவர்த்தினி, இராசலெட்சுமி, தனலெட்சுமி, பகவதி ஆகியோரின் மைத்துனரும், வை. சந்திரலிங்கம் [கிராம சேவையாளர், பொலிகண்டி], இ. கோபிநாதன் [கனடா], செ. உமாசுதன் [ஜேர்மனி] ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் வல்வெட்டித்துறையில் உள்ள மாமனாரது [கண்மணியப்பு] வீட்டில் வெள்ளிக்கிழமை [நேற்று] மாலை நடைபெற்று, பூதவுடல் ஊறணி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஞா. நகுலேஸ்வரன்
[மருமகன் நந்தன்]

அ. மி. பாடசாலை ஒழுங்கை,
கொண்டைக்கட்டை,
வல்வெட்டித்துறை.

[16521]

### கந்தப்பர் தம்பையா

[இளைப்பாறிய ஆசிரியர்]

காரைநகர் களபூமி திக்கரையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தப்பர் தம்பையா காலமானார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், இந்திராணி, யோகராணி, அம்பிகைபாகன் [ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி], நடேசலிங்கம், தியாகலிங்கம் [மனேஜர், S. U. M நிறுவனம்] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆறுமுகம் [ஆசிரியர், சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்], பரமானந்தம் [மூதூர் கப்பற்சேவை நிறுவனம்] இராஜலோஜினி, பரமேஸ்வரி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், தபோநிதி, பிறேமச்சந்திரன், திருலோகநாயகி, தவச்செல்வி, யோகேஸ்வரன், யோகலிங்கம், விமலரூபன், ரூபதர்சினி, ஜெயக்குமார், திருமகன், கஸ்தூரி, சற்குணராஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
த. அம்பிகைபாகன் [மகன்]

[16523]

# லெப். தியாகு வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப். 27

குப்பிளான் பகுதியில் நேற்று இடம்பெற்ற நேரடி மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் தியாகு [ஆழ்வாப்பிள்ளை தர்மராஜா— குச்சவெளி] வீரமரணமடைந்தார்.

இவரது புகழுடலும், ஊர்காவற்றுறை மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை குட்டியின் புகழுடலும் இன்று காலை 9 மணி முதல் 11 மணி வரை புத்தூர் வேம்பிராயில் பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பின்னர் கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். [உ]

## அதிபர்கள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பகுதி அதிபர்களுக்கான கல்விக் கருத்தரங்கு நாளை மறுதினம் [திங்கள்] பிற்பகல் 2 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

## நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை முற்பகல் 9-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் ஆரம்பபாடசாலையில் நடைபெறும்.

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாசாலையில் இக் கூட்டத்தை நடத்த முன்னர் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. [ஒ]

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உடுப்பிட்டி, பருத்தித்துறைக் கிளைகளினால் நாளை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடத்தப்படவிருந்த கல்வி நிர்வாக சேவை தரம் III போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. த. அருணகிரிராஜா தெரிவித்தார். [உ]

### தனிச் சிங்களச்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அன்றுவிட்ட தவறுகளுக்காக தற்போதைய எனது அரசு தக்கபரிகாரங்களை மேற்கொண்டு வருகின்றது— இவ்வாறு அவர் மேலும் கூறினார். [உ-எ]

### ஊர்காவற்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் குறித்து விவரம் தெரிய வரவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் கார்த்திக் [ராஜேஸ்வரன் இந்திரகுமார் — சண்டிலிப்பாய்], ராஸீக் [நாகேஸ்வரக் குருக்கள் மதுசூதனன்—இணுவில்], மனோச் [அழகன் கருணாநிதி—கண்டி], குட்டி [மாணிக்கம் ரவீந்திரன்—புத்தூர் மேற்கு] ஆகிய நான்கு போராளிகளும் வீரமரணம் அடைந்தனர். [உ]

### காரைநகர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அறிய முடியவில்லை.

இதேவேளை —

நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் வேதரடைப்புப் பகுதியில் குடிமனைகளை இராணுவத்தினர் தீ மூட்டி எரித்ததாகவும் —

அப் பகுதியில் கரும்புகை மண்டலம் காட்சியளித்ததாகவும் கடைசியாக வெளியேறி [illegible]

# வேலணையில் பலாலி ஷெல்

வேலணை, ஏப் 27

நேற்று முன்தினம் இரவு பலாலி முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரத்தில் விழுந்து வெடித்தது.

கோழிக்கூட்டில் ஷெல் விழுந்ததால் பல கோழிகள் இறந்தன.

வளவில் நின்ற தென்னை மரங்கள் சிலவும் முறிந்து விழுந்தன. வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பிவிட்டனர்.

பலாலி ஆட்லறி ஷெல் வேலணையில் விழுந்து வெடித்தது இதுவே முதற் தடவையாகும்.

இதேவேளை—

ஊர்காவற்றுறை, காரைநகர் முகாம்களிலிருந்து நேற்றும் ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

புளியங்கூடல், நாரந்தனை, கின்னமடு, தம்பாட்டி, கரம்பன் ஆகிய பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-167-15]

# ஆசிரியர்களின் சம்பளம் விரைவில் அதிகரிக்கும்?

கொழும்பு, ஏப். 27

ஆசிரியர்களின் சம்பள விகிதத்தை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி உலக ஆசிரியர் தினம் அன்று சம்பள விகித மாற்றம் குறித்தும் மற்றும் பல யோசனைகள் குறித்தும் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை— நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த சம்பளத்தை ஒரு லட்சத்து 8 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்டு உள்ளது.

இந்த சிபாரிசு அங்கீகாரத்திற்காக பொது நிர்வாக அமைச்சுக்கும் திறைசேரிக்கும் சமர்ப்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-எ]

# புதுடில்லியில் அத்வானியை எதிர்த்து ராஜேஷ் கன்னா!

## இறுதி நேரத்தில் வேட்பு மனு

புதுடில்லி, ஏப். 27

புதுடில்லி லோக சபைத் தொகுதியில் ஆச்சரியமூட்டும் விதத்தில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக பிரபல இந்தி நடிகர் ராஜேஸ் கன்னா நேற்று வேட்பு மனு வைத்தாக்கல் செய்தார்.

இத்தொகுதியில் பாரதிய ஜனதா கட்சித் தலைவரான திரு. எல். கே. அத்வானி தமது வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்பது தெரிந்ததே.

திரு. அத்வானி குஜராத் மாநிலத்தில் காந்திநகர் லோகசபைத் தொகுதியிலும் போட்டியிட வேட்பு மனு வைத் தாக்கல் செய்தார்.

பாரதிய ஜனதாவின் இன்னொரு தலைவரான அடல் பிஹாரி வாஜ்பாஸ் உத்தரப் பிரதேசம்— லக்னோ தொகுதியிலும் மத்தியபிரதேசம்— விதுஷலோகசபைத் தொகுதியிலும் போட்டியிட வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தார். [உ-எ]

## பஞ்சாப் ஆளுநர் செயலாளர் சுட்டுக்கொலை

பஞ்சாப் மாநில ஆளுநர் ஜெனரல் ஓம் பிரகாஷ் மல்ஹோத்ராவின் செயலாளர் ரத்தனலால் சர்மாவை சீக்கியத் தீவிரவாதிகள் நேற்று சுட்டுக் கொன்றனர் என்று பி. ரி. ஐ. செய்தி தெரிவித்தது.

சர்மாவுடன் இருந்த இன்னொரு அரசு அதிகாரியும் அப்போது சுட்டுக்கொல்லப்பட்டார்.


## வேலை வாய்ப்பு

வளர்ந்து வரும் சிவில் - பொறியியல் துறை நிறுவனமொன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதிக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

1. சிவில் பொறியியலாளர்கள்
2. சிவில் துறைசார் படவரைஞர்கள்
3. பொது அலுவலக நிர்வாகி

5 வருடத்திற்குக் குறையாத முன்னனுபவம் இருக்க வேண்டும். தகுதியானவர்கள் 10 - 5 - 1991 க்கு முன் பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பரதாரர்,
இல. 308, மே/பா உதயன்.

[சி-5139]

## A/L PHYSICS

திரு. கணேசன் (B. Eng.)

சனி — ஞாயிறு

8-00 — புலங்கள் [Fields]
9-00 — பொறியியல் [Mechanics]
10-00 — வெப்பவியல் [Heat]
11-00 — ஒளியியல் [Light]
12-15 — சடப்பொருளியல் [Properties of Matter]

ஆரம்பம்: 27-04-1991

BOND INSTITUTES

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[16616]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org